உ

வந்தேமாதரம்!

இந்திய கீத சந்திரிகை.

கழுகுமலை,

திரு. ரா. ம. சுப்பையர்,

இயற்றியது.

சங்கரநயினார்கோவில்,

"ஆனந்தா அச்சியந்திரசாலை"யில்,

பதிப்பிக்கப்பெற்றது.

௲௯௱௯ ருத்ரோத்காரி மாசி.

C-,1X
H23
179385

உ

வந்தேமாதரம்.

நமது,

ஜன்ம பூமியும் புண்யபூமியும் ஆகிய,

இந்திய நாடு முன்னுக்குவரும்வழி,

என்ற,

இந்திய கித சந்திரிகை.

கழுகுமலை,

ரா. ம. சுப்பையர் அவர்களால்,

இயற்றப்பட்டு,

இராமனாதபுரம் ஜில்லா, சண்முகநாதபுரம்,

மகா-ா-ா-ஸ்ரீ ரா. ம. நாகப்பசெட்டியாரவர்கள்,

திரவிய சகாயத்தால்,

சங்கரன்கோவில்,

"ஆனந்தா பிரிண்டிங் பிரஸில்"

பதிப்பிக்கப்பெற்றது.

1923.

முன்னுரை.

அமிழ்தினு மினிய தமிழ் மொழியில் எண்ணிறந்த காவியங்கள் இயன்றிருப்பினும் அவையனைத்தும் பக்தி, ஒழுக்கம், காதல் இவற்றின்பாற் பட்டிருக்கின்றனவேயன்றி சனசமூக பொது தர்மங்களைப் புகட்டுங் கீதங்கள் பொன்பூமணமே, இக்குறைநீக்குவான் கருதி யிதுகாறும் எவரும் முன்வந்திலர். தற்போது பொதுநலத்துக் குழைத்துவரும் சிறந்த தேசாபிமானியும்எனது நண்பருமான தூத்துக்குடி வக்கீல் பி. ஏ, பி. யல் ப்ரமஸ்ரீ **S. V.** விஸ்வநாதஅய்யர் அவர்கள் தேசபக்திப் பெருக்கால் நம் இந்திய நாட்டின் அருமை பெருமைகளையும் கல்வி, கைத்தொழில்களாதிய நவீனநாகரீகங்கள் பெருகி நாம் அபிவிருத்தி அடைதற்குற்றவழிமுறை ஸாதனங்களையும் பற்றித் தெளிவாய்விளங்குமாறு எளியநடையில் இயற்றப்படும் பாட்டுகளுக்கு "ரானடே கோக்கலே" என்ற தேசாபிமானிகள் பெயரால் ரூ 300-வரை பரிசளிப்பதாய்ப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்தார்கள், அவ்விதம் வந்த கீதங்களில் நமது சந்திரிகை தக்க மத்தியஸ்தர்களால் நன்கு மதிக்கப்பட்டு தங்கமெட்டல் பரிசளிக்கப்பட்டது.

ஒரு தேசம் உன்னத நிலையடைய வேண்டின் அதிலுள்ள ஆடவர் மகளிர் அனைவரும் ஒருங்கே பொதுதர்மாதி விஷயங்களை நன்குணர்ந்தாலன்றி முடியா. இந்தியராகிய நம்மிலோ அவ்வாறு சிறிதுமறியா ஸ்திரீகளும் புருஷர்களுமே பெரும்பான்மையோராவர். ஆதலின் அவர்களின் மனப் போக்குக்காரியங்களை தன்வயமாக்கி நல்வழிப்படுத்த சாதாரணமாய்ப் பாடும் நாடோடிப் பாட்டுகளே மிகுதியும் தகுதியாம்.

ஆகவே இச்சந்திரிகை நம்தாய்நாட்டில் இல்லம்தோறும் உள்ளும் புறமும் ஒருங்கே ஒலிவீசி ஆண்பெண் அனைவரும் ஆனந்திப்பதே எனது வேண்டுகோளும் என் மனவூக்கத்திற்கோர் தூண்டுகோலுமாம்

தேச சேவையிலீடுபட்டுப் பொருளுதவி அச்சுவாசனமிட்டிச்செக மூலவச் செய்த திருவாளர் ரா. ம. நாகப்பரெட்டியார் அவர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றி செலுத்துகிறேன்.

ரா. ம. சுப்பையன்.

சாற்றுக்கவிகள்

பழங்கோட்டை வரகவி லெக்ஷ்மீநாராயணசாஸ்திரியவர்கள்
குமாரரும் சங்கரன்கோவில் தேவிதாஸ வித்வான்
S. வயித்தீஸ்வரமய்யரவர்கள் மருமகருமான
பிர்மஸ்ரீ லெ. பூவநாதய்யரவர்கள் இயற்றியது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பாரதனுட் டிரையுடையாள் முகநிகர்த்துப் பொன் னுலகைப் பரிசளிக்கும்
பாரதனுட் டின்புகழை நேருறச்சங் கீதத்திற் படைத்தானுகப்
பாரதனுட் டம்முடைய நிஞர்கனி [illegible] பகுப்பு வரவிரன்
பாரதனுட் டின்பொருளாற் சீர்பெறு [illegible] னெறியாகப் பாடினுனல்

இக்கவிக்குஞ் சரமெவ்வென் [illegible] ஞ்சங்குயமின் னிடையற்கூழை
யிக்கவிக்குஞ் சொல்லுடை [illegible] னமும் இன்பத் தாற்பூ
ரிக்கவிக்குஞ்சரிதன்சுப்பையய [illegible] த்தோனிவன் றன்முன்னு
ணிக்கவிக்குஞ் சிரங்கலமா னெனிலிவன்க [illegible] த்திறமைக் கிணையேறுண்
[டோ.

சங்கரநயினர்கோவில்,
திரு. மீ. கதிர்வேலியற்றியது.

செந்தமிழி லிந்தியகீ தச்சந் திரிகையெனச்
சிந்தைக்கின் பம்பயக்கச் செய்ததுவும் — அந்தரியெம்
ஆவுடையா ளீன்றசுதற் கன்புசெயும் சுப்பையன்
மாவுடையார்க் கான்ற மருந்து.

எட்டையாபுரம் சமஸ்தானம் வித்துவானும், பத்துப்பாட்டு நூல்
இயற்றிய சங்கப்புலவர், மாபுதித்தவருமான
மகா-ா-ாஸ்ரீ சிவசங்கரப்புலவரவர்களியற்றியது.

மறைதெரிந்தோ தியவாயான் பேரறிஞன் கழுகுமலை வளர்சுப் பையன்
இறைதெரிந்து கவித்ததுடை நிழற்கீழுற் றிடுமாந்தர் இடத்தி லுள்ள
குறைதெரிந்து தவிர்த்திட இந் தியகீத சந்திரிகைகுவல யத்தே
முறைதெரிந்த பெரியோர்கேட்டானந்திக் கும்படியாய்மொழிந்தான்மாதோ

வந்தேமாதரம்.

இந்திய கீத சந்திரிகை.

தாய்நாட்டுவணக்கம்.

[தாண்டகம்,]

உயர்வெண்ணோம் தாழ்வெண்ணோம் ஊருமெண்ணோம்
ஒற்றுமையே யன்றியொரு வுத்தியெண்ணோம்
ஊழென்னோம் நாளென்னோம் வுவப்புமுன்னோம்
ஊக்கமலா தாக்கமுள தெனவுமுன்னோம்

அயர்வுறுபல் ஜாதிமத பேதமுன்னோம்
அன்னியரென் றுன்னுவிரோ தங்களெண்ணோம்
அடமண்ணோம் மடமண்ணோம் அவலமண்ணோம்
ஆண்மைமிகு மேன்மைகளை யகலவொண்ணோம்

மயல்செறியும் மாதரையுங் குறைக்கவெண்ணோம்
மனவலியைக் கைவிட்டு மயங்கவொண்ணோம்
மதுவுண்ணோம் புகையுண்ணோம் புலாலுமுண்ணோம்
வாய்மையலாற் பொய்மைமா பாலநண்ணோம்

உயிர்கள்துய ரடையவொரு சிறிதுநண்ணோம்
உன்பணியிற் சற்றேனுங் குறைவுபண்ணோம்
உலகமுழுதும் புகழிந் தியத்தாயே
உனைப்பணிந்தோம் அனுதினமு முளத்திற்கொண்டே.

சுபம்.

நூல்.

தாய்நாட்டின் பெருமைகள்.

["முத்திநெறி" யென்ற தேவாரமெட்டு]

அலைகடல் சூழ் உலகுதனில்
அழகு மிகும் இந்தியாவின்
மலை நிகரும் மாட்சி சொல
வல்லமையான் தாள் துணையே. (௧)

பூமிகளின் திருமுகமாம்
புண்ய இந்தியா நாட்டினது
மாமகிமை யான் புகல
வாணி தேவி வந்தருள்வாய் (௨)

உலகமென்ற உடம்பிற்கு
உயர்வான இருதயம் போல்
இலகுகின்ற புண்ய தேசம்
இந்து தேசம் ஒன்றேயன்றோ? (௩)

ஆதி முதல் பாஷை கல்வி
அறிவொழுக்கம் பக்தி ஸத்யம்
நீதி மாக்ஷி நாகரீகம்
நிறைந்த தன்றோ? இந்து தேசம். (௪)

கணித சிற்ப வான நூல்கள்
கைத்தொழில் ஸங் கீதம் வைத்தியம்
அணி மிகுந்த சித்திரமும்
அமைந்த தன்றோ? இந்து தேசம். (௫)

வேத புரா ணேதிகாஸம்
விளங்கு பல காவியங்கள்
ஓதி யுணர் கலைகளெல்லாம்
உடையதன்றோ? இந்து தேசம். (௬)

நில வளமும் நீர்வளமும்
நிகரில்லா ஜனவளமும்
மலை வளமும் அலை வளமும்
மலிந்த தன்றோ? இந்து தேசம். (௭)

கைத்தொழில்கள் வர்த்தகங்கள்
கன விவஸா யத்தொழில்கள்
அத்தனைக்கும் அனுகூலம்
ஆன தன்றோ? இந்து தேசம். (௮)

முப்புரமும் சூழ் கடலில்
முத்து சங்கு நற் பவளம்
செப்பமாக விளைவளமும்
செறிந்த தன்றோ? இந்து தேசம். (௯)

இமயமலை விந்தியமலை
இசைந்த நல குடகு மலை
அமைப்புமலை அருவிகளும்
அணிந்த தன்றோ? இந்து தேசம். (௰)

கங்கை ஸிந்து யமுனை கிருஷ்ணை
காவேரி கோதாவரி
துங்கபத்ரா தாம்பிரவர்ணி
தூநதிகள் பலவுமுண்டு, (௰௧)

[பாளைவாய், என்ற காவடிச்சிந்து மெட்டு.]

நதி நதங்கள் மிகவுமுண்டு நல்ல நல்ல பூமியுண்டு
அதிசெய்விவ சாயமும் ஏராளமாய் இங்கு
தோன்று தொட்டே ஆனது தாராளமாய் (௧)

பாசனங்கள் மிகவுமுண்டு பலவுணவுப் பண்டமுண்டு
மாஜனங்கள் வாழுதற்க பீஷ்டமாய் நல்ல
வகைவகையாய்ப் பொருள்களுண்டே தேஷ்டமாய். (௨)

தங்கமுண்டு வெள்ளியுண்டு தாமிரமோ டிரும்புமுண்டு
துங்கநவ ரத்தினமும் ஜோதியாய் மிக
துலங்கிவிளை நிலங்களுண்டு ஆதியாய். (௩)

வெப்பமுண்டு சீதமுண்டு விரும்புவிமலோ தகமுண்டு
செப்புகுற்ற லழகலாப் வாசமே செய்ய
சிறந்தநல்ல தலங்களுள்ள தேசமே. (௪)

காசி பிரயாகை கயா காஞ்சி யருணைபரங்கம்
மாசில்பூரி வெங்கடமித் தேசமே சேது
மதுரை தில்லை நெல்லையுமித் தேசமே. (௫)

மன்னர் மன்னர் வீற்றிருக்கும் மரகதமயி லாசனம்
மின்னுமுடிக் கோகினூரித் தேசமே அதன்
மேன்மை கோடி ஸூரியப் பிரகாசமே. (௬)

பொது நலத்துக் காகச்சீவன் பொருந்தியுள்ள யோதிலேதன்
முதுகெலும்பைத் தந்துநற்ச காயமே செய்த
முனிததீசி பிரந்ததிவ்ய தேயமே. (௭)

சரணமென்று வந்தபக்ஷி தன்னைக்காக்கத் தன்தொடையைத்
திரணமா யறுத்தளித்து நேசமே கொண்ட
சிபியரசர் வாழ்ந்ததிவ்ய தேசமே. (௮)

தப்புவழி தன்னைநீக்கி தரணியில்மெய்ப் பொருளைநாட்ட
செப்பொணாக் கஷ்டங்களுற்று நியாயமே கொண்ட
சின்னஞ்சிறு ப்ரக்லாதனித் தேயமே (௯)

கருமமேகைக் கொள்வதனால் சங்கடமிக வரினும்
பொறுமையாகச் செய்வது கட்டாயமே எனப்
புகட்டியஸ்ரீ ராமனுமித் தேயமே. (௰)

தர்ம வுண்மை மறந்தவர்க்குத் தருமோபதேசஞ் செய்து
கர்மபூமி யுய்யச் செய்யு பாயமே கொண்ட
கண்ணனவ தாரமுமித் தேயமே. (௰௧)

சத்திய அரிச்சந்திரன் தர்மன் தக்க யீகையுள்ள கர்ணன்
சுத்தவீர னர்ச்சுனனித் தேசமே அங்கு
ஆய பீஷ்ம துரோண ருமித் தேசமே. (௰௨)

வீர சூர தீர ரெல்லாம் வியந்து பயந் தெங்கு மோட
பாரதப் போரில் ஜெயப்ர காசமே — பெற்ற
பாலனைப் மன்புவுமித் தேசமே (௧௩)

சட்ட கர்த்த ரானமனுச்சக்ர வர்த்தியாக்ஞ வல்கியர்
சிட்டவேத வியாசருமித் தேசமே — சரிதம்
செப்புசூத மாமுனியித் தேசமே. (௧௪)

அன்பெனுஞ்சஞ் சீவிதந்து அகிலமெல்லாங் காக்கவந்த
மன்புதல்வர் புத்தருமித் தேசமே — மற்ற
மாதவ மகான்களுமித் தேசமே. (௧௫)

உலககுரு சங்கரரும் உத்தமரா மானுஜரும்
இலகுமத் வாசாரியர் முதலியாருமே — வந்து
இங்குஅவ தாரமன்றோ? தேருமே (௧௬)

கவியிலுயர் காளிதாசர் கம்பர்புக ழேந்தி வில்லி
புவிபுகழும் ஔவை நாயனாருமே — இப்போ
போற்றிடும் ரவீந்திரநாத் டாகூருமே (௧௭)

திபாதியாயிவ் வுலகில்திவ்ய கீர்த்தனைக ளியற்றிவைத்த
தியாகையர் க்ஷேத்ரஞ்யரு மித் தேசமே — உயர்
தீக்ஷிதர் சுப்பிரமண்யரித் தேசமே. (௧௮)

கண்ணனைப்போல் வேணுகானம் கர்ணாநந்த மாகச்செய்த
புண்ணியர்சர பருமித் தேசமே — எங்கும்
புகழ்வைத்திய ரூதையரித் தேசமே (௧௯)

மகதியாழ்வல் லோனுமந்த மாமுனி நாரதனைப் போல
மகிதலம் மகிழ வீணா கானமே — செய்து
வாழ்ந்தவீணை சேஷண்ணா வித்தானமே. (௨௰)

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் நமதுமா விவேகானந்தர்
ராமதாஸ் கபீர்து காராம் தாசரும் — நம்
நாடுபாரும் புகழ்வ ளெந்த தேசரும். (௨௧)

ஸ்ரீமான் தாதா பாய்நௌரோஜி சிறந்தகோகலே பானர்ஜி
பூமான்ராம மோகன்ராயித் தேசமே — நம்
புகழ்போஸ் காந்தி ரானடேயித் தேசமே (௨௨)

இந்தியர் திலகமாக இலகு திலகர் விபினபாலர்
சுந்தர லஜபதியித் தேசமே நம்
சுப்ரமண்ய அய்யருமித் தேசமே. (உ௩)

ராஜ ராஜ ராண்ட நாடு நல்லோரெல்லாம் வாழும்நாடு
தேச மெல்லாம் ஆசைகொள்ளும் நாடிதே மிகச்
செல்வமெல்லாம் பொங்கிடும் பொன்னாடிதே (உ௪)

இவ்வரிய நாடுதன்னில் இப்போதுள்ள நம்நிலமை
எவ்வளவு தாழ்மையென நேர்மையாய் இப்போ
தேவருமா ராய்வோம்புத்திக் கூர்மையாய். (உ௫)

வித்தையிலும் புத்தியிலும் மேதையுள்ள இந்தியர்நாம்
சுத்தஜடம் போலவிப்போ சாலவே நாம்
தூங்கலாமோ கும்பகர்ணன் போலவே. (உ௬)

சர்வஜன சமரசம்.

[மந்திரமாவதுநீறு. என்ற தேவார மெட்டு.]

இந்தியா வென்றநந் தேசம் இதில்
எத்தனை ஜாதி வித்தியாசம்
இந்த நிலை முழு மோசம் இதை
எண்ணு விடில் பெருந் தோசம். (௧)

சொல்லி முடியாத ஜாதி மதத்
துவேஷங்களோ பிரக்யாதி
சல்லிய மாமரியாதை எனுஞ்
சண்டை களோ ஊரில்பாதி. (௨)

உயர்வு தாழ் வென்றிடும் பேச்சு மிக
வுண்டாகி யொற்றுமை போச்சு
அயலார்க் கிது வொரு ஏச்சு காரியம்
அத்தனைக் குந்தடை யாச்சு. (௩)

அன்னிய நாட்டினைப் பாரும் — அவர்
ஆண்மை, கல்வி, செல்வச் சீரும்
அன்னியோன்ய வாழ்வு நேரும் — இப்போ
தாராப்குவோமனை வோரும். (ச)

ஜப்பானொருசிறு நாடு — அதன்
தன்மைக் குண்டோ வொரு மீடு
ஒப்பிலா வொற்றுமைப்பாடு — தன்னால்
உயர்ந்த தன்றோ? அந்த நாடு. (ரு)

ஐக்கியநாடுகள் நாடும — அந்த
அமெரிக்கர் போல்நலந் தேடும்
சௌக்யமா யவ்வழி கூடும — நல்ல
சம்பத்தடையு மிந்நாடும. (சு)

பிலிப்பெயின் தீவொரு நாடோ — அந்தப்
பிரஜைகளிலும் நாமுங் கேடோ
சலிக்கா விடில்நமக் கீடோ — நம்
தாய்நா டென வெறுங் காடோ. (எ)

எங்கெங்குஞ் சங்கங்கள் கூடி — மிக
ஏற்றமான முறையாடி
அங்கிலைய வழி நாடி — நாம்
அடைகுவோம் நன்மைகள் கோடி, (அ)

ஜாதி மதபேதம் நீங்கி — நம்
சமுதாய நன்னிலை யோங்கி
மேதையர் சொல்மனம் வாங்கி — நாம்
மேன்மை யடைகுவோம் ஓங்கி. (கூ)

தாழ்ந்தவர் தாழ்ந்தவ ரென்று — நாம்
தள்ளிவிடல்நல மன்று
ஆழ்ந்து பார்க்கில் யாருமொன்று — இதை
யாராய்ந்து செய்வதே நன்று. (ய)

காசி ஜகந்நாதப் பாரும் — அங்்கு
கடவுளைத் தொட்டு மெல்லாரும்
பூசிப்பார் நேசமாய் யாரும் — கண்டு
போற்றுவ தில்லையோ நீரும். (௰௧)

திருப்பாற் சூழ்வாரென ஜாதி — அங்கு
திருநாளைப் போவார் பெச்சாதி
திருக்குலத் தாரென்ன ஜாதி — எல்லாம்
தெரிந்து பழிப்பதோ நீதி. (௰௨)

சீர்திருத்தங்கள்.

("நியாயந்தானே நீர் சொல்லும்" என்ற மெட்டு.)

பல்லவி.

எந்தன் நண்பரே கேளும் — இப்போ
தியம்பு கின்றது கையாளும்

சரணங்கள்

இந்து சமூக மொரே ஜாதி — யென்
றிருப்பது வேமிகக் கியாதி
செந்தமிழ்க் கலைகளை யோதி — நாம்
சேர்ந்து வாழ்தலே நீதி. (௧)

பாலவி வாகத்தை நீக்கி — நம்
பாவைய ரின்துயர் போக்கி
கோல முறுமண மாக்கி — அவர்
குறைதவிர்ப் போஞ் சீர்தூக்கி. (௨)

மணஞ்செய பணம் வாங்க வேண்டாம் — செய்வோர்
மனமின்றி வதுவையும் வேண்டாம்
பணச்செலவு அதிகம் வேண்டாம் — பின்
பஞ்சைகளில் தவிக்கவேண்டாம். (௩)

பிறமதம் புகுந்து வந்தாலும் நாம்
பிரியமாய்ச சேர்க்கின் மென்மேலும்
திறமாய்ச் சமூகமெக் காலும் மிகச்
சிறப்புறு முண்மைமுக் காலும் (ச)

எடுப்பதற் கெல்லாங்கச் சேரி சென்
றிறைக்கவேண் டாஞ்சொத்தை வாரி
கொடுப்போம் பஞ்சாயத்துக் கோரி யதில்
தோன்றுவதே சுகவாரி. (ரு)

கிராமப் பஞ்சாயத்தேற் பாடு அதில்
கிடைக்கும் பண்ணைக்கட்டுப் பாடு
திராவிட ரொற்றுமைப் பாடு உண்டாய்த்
தீருமே நம் குறைபாடு. (சு)

உள்ளவை வெளிதாகத் தெரியும் அதில்
உபகதிர வமிகக் குறையும
கொள்ளையாய்க் கோர்ட்டிலே சொரியும் பணம்
குவிந்து நம வீட்டினில் நிறையும. (எ)

ஐக்கிய நாணயச் சங்கம் தனை
அமைப்பது வெகுமக்களகம்
கைக்கொள்ளுவோ மதை பெங்கும் இதில்
கைத்தொழில் செல்வமும் பொங்கும். (அ)

அநியாய வட்டிகள் கொடுத்து நம்
ஆஸ்திகளையெல்லாம் விடுத்து
மனைவி மக்களையுங் கெடுத்து பின்
மயங்க வேண்டாம் ஜயி லடுத்து. (கூ)

தாலுகா ஜில்லா போர்டு களில்
தக்க பிரதிநிதிகளோடு
மேலாக நாமே யேற்பாடு செயின்
மேன்மை யடையு மிந்த நாடு. (ώ)

சரி சரி பெனத்கலையாட்டம் செய்யும்
தாக்ஷண்ய மெடுத்திடு மோட்டம்
அறிவர் நிர்வாகச்சி ரேஷ்டம் நலம்
அடையுமே பொதுஜனக் கூட்டம். (யக)

விவசாயம் கைவிட வேண்டாம் கூலி
விகிதம் குறைத்திட வேண்டாம்
அயல் நாடு சென்றிட வேண்டாம் அவர்
அடிமையாய்க் கொள்ளவும் வேண்டாம். (யஉ)

உத்யோகம், உத்யோகமென்று நாம்
உயிரை விடல்நல மன்று
கைத்தொழில் தன்னில் முயன்று நாம்
கனதன மடைதலே நன்று. (யங)

பருத்தி புண்டாவ திந்நாடு அது
பாங்காய்மல் லாவதோர் நாடு
தரித்திர மடைவதிந் நாடு மகா
தனிகர்களா வதோர் நாடு. (யச)

திக்திக்கும் வெல்ல மிந்நாடு அது
சீனி யாவதோர் நாடு
வத்திக்குத் தேங்காயிந்நாடு அது
மாண்பா யமைவதோர் நாடு. (யரு)

பனைமரத் துப்புமி ந்நாடு ஆகும்
பல்விதத் துடைப்பா னோர் நாடு
இணையில்லாக் கொம்புமிந் நாடு அதில்
இயற்றுஞ் சிமிழ் சிப்போர் நாடு. (யசா)

தோல்கா ளனைத்துமிந் நாடு அது
தூக்கும் பையாவதோர் நாடு
நால்விதப் பொருளுமிந் நாடு அவை
நாணய மாவதோர் நாடு. (யஎ)

எத்தனையோ யினு மிங்கே இருந்
தேறாறு மதிபாரு மங்கே
அத்தனை யும்வில்ல யிங்கே அதில்
அடையும் பெரும்பொரு ளங்கே. (௧௮)

வெண்ணெய் கொடுத்துநாம் நெய்யை யிப்போ
விலைக்கு வாங்கு மிந்தச் செய்கை
திண்ணமாய் நஷ்டமாம் மெய்யை நாம்
தெரியாமல் பிசைவதோ கையை. (௧௯)

இந்தியாவுக் கிலையுண்டோ இதில்
இல்லாப் பொருளொன்று முண்டோ
வந்தாகத் தக்கது முண்டோ இந்த
மாக்ஷிமை மற்றதற் குண்டோ. (௨௦)

ஆடவர் கடமை.

["மாதரை நினையாதே" யென்ற மெட்டு]

பல்லவி.

நீதியை மறவாதே—நல்ல
நீதியை மறவாதே.

அனுபல்லவி.

மாதவன் சங்கரன் வேதனு மாதரை
மார்பினில் பாதியில் நாவினில் தாங்கிடும் நீதி

சரணம்.

மாதர்பால் கருணையைக் காட்டி—அவர்
மகிமை உரிமைபா ராட்டி
பேதமை யென்பதை யோட்டி—நாம்
பேணுவோம் கல்வியை யூட்டி நீதி (௧)

மனைவியைக் கேவலம் அடிமை—யென
மதித்து நடத்தல்மிகக் கொடுமை
நினைவுசொல் செய்கையில் கடுமை—தனை
நிகழ்த்திடி லடைகுவோ மிடிமை. நீதி (௨)

வரதக்ஷணையணி யாயம்—இதால்
வந்தது பிராணு பாயம்
விரதமா யிவ்வா தாயம்—தனை
வெறுத்தாலே தெய்வ சகாயம் நீதி (௩)

வங்காள சிநேகலதா கன்னி பெற்றோர்
வரதக்ஷிணை யால்மனங் கன்னி
சங்கடப் படுவதை யுன்னி—உடன்
தன்னுயிர் துறந்தாள் விற்பன்னி. நீதி (௪)

அந்தோ! இஃ தெனபரி தாபம்—நம்
ஆடவர்க் கேனிப்ர தாபம்
வந்திடும் மினுமாதர் பாபம்—அப்போ
மாதா இடுவாள் பெருஞ் சாபம் நீதி (௫)

மாதரொழுக்கம்.

(மேற்படி மெட்டும் மேற்படி பல்லவியும்)

கற்புள்ள மாதர்தங் கடமை—களைக்
கைக்கொள்வ தேபுத்தி யுடைமை
அற்பமாந் துணிமணி யுடைமை—களுக்
காசைப்படுதல் சுத்த மடமை (நீதி) க.

கணவனை தலைவனெனக் கொண்டு—அவர்
கருத்தின தெனமுனே கண்டு
குணமுடனவர்க்குநல தொண்டு—செய்து
குலவி மகிழ்பவளே பெண்டு. (நீதி) உ.

புருடர்க் கனுகுணமாய் நடந்து—மிகப்
பொறுமை மெய் பொறுப்பு மடைந்து
கரும நெறி முறையே நடந்து—நல
சந்ததி பெறவேண்டு மகிழ்ந்து (நீதி) ௩.

ஆண்மையறிவு நிறை சேய்கள்—தம்மை
யடைந்தவரே நல தாய்கள்
வீண்மய லிலுழன்று நோய்கள்—கொண்டு
வீணர்களைப் பெறுவோர் பேய்கள். (நீதி) ௪.

கெட்டுஞ் சீருமின்றி பெட்டி—அதின்
திரவியங்களை மூட்டை கட்டி
செட்டி கட்டானுக்குக் கொட்டி—பணம்
தெருவிலிறைப் போர் காமட்டி (நீதி) ௫.

வீண்மயக்கம்.

[ஆனந்தக்களிப்பு]

பல்லவி.

வீண்மயக்கங் கொள்ள வேண்டாம்—நல்ல
ஆண்மக்களாயுள்ள அறிவுடையோரே. (வீண்)

சரணங்கள்.

காப்பி தேயிலை கொக்கோ பானம்—நம்
காயத்துக் கேதரும் மிகப்பல வீனம்
சாப்பிடு தல்பதி யீனம்—பிவை
சகலவிதமான நோய்க்குமா தீனம். (வீண்) ௧.

முன்னாளி லிவையெல்லா முண்டோ—அந்த
முதியோர் பலத்தினிற் சிறிதாவ துண்டோ
பன்னாளில் சுகமெனுங் கண்டோ—அன்றி
பணநஷ்ட மில்லையென் றுகிலுமுண்டோ (வீண்)

குடித்து வெறித்துபுத்தி படித்து—சுருட்டை
கொள்ளிவாய்ப் பேய்போல பற்களிற் கடித்து
நடித்திடும் வேசையாசை பிடித்து—கெட்டு
நவிந்திட வேண்டாம் மனமிகத் துடித்து (வீண்) ௩

அக்ரம அழிம்புகள் தொடுத்து—பல்
ஆபாச நோய்களால் படுக்கையிற படுத்து
மிக்கவே தேகத்தைக் கெடுத்து சாத்தை
வீணுக்க வேண்டாம் டாக்டரை யடுத்து (வீண்) ௪

ஆயுர் வேத பூரணி வைத்ய
ஔஷதங் களேம்பிகக் குணப்ரதானி
நேயமா யிதையபி மானி இன்றேல்
நேரிடு மேயுந்தன் பொருளுயிர்க்கானி (வீண்) ரு

பரிதானகண்டனம்.

["நவசித்தி" என்றமெட்டு]

கண்ணிகள்.

அநியாய மாய்லஞ்சம் வாங்கிச்சம் பாதிக்கும்
அதிகாரி பெரும்பாவி
தந்நியாயம் தெரியாமல் கைக்கூலி யாறகார்யம்
சாதிப்போன் வெறுஞ்சாவி.

எரிகிற வீட்டினிற் பிடுங்குத லாபமென்
றெண்ணுவோன் பெரும்பாவி.
பரிதானங் கொடுத்துத்தா னுழையாமற் சீவனம
பண்ணுவோன் வெறுஞ்சாவி. (௨)

வம்புதன் பால்பணம் ரெம்பவுந் தேடியே
மகிழ்பவன் பெரும்பாவி.
சம்பளத் தோடுமேல் வரவென வெனக்கேட்கும்
தறுதலை வெறுஞ்சாவி, (௩)

ஆலயஞ் சுதந்திர வழிபடுமென்று கொள்ளை
யடிப்பவர் பெரும்பாவி.
பாலயன் மெய்யும் காணாத சிவபக்தி
மறந்தவன் வெறுஞ்சாவி. (௪)

சிவசொத்துக் குலாசமெனத் தெரிந்தே சேர்க்கும்
திருடர்கள் பெரும்பாவி.
எவர்புத்தி யுங்கள்ளி சுயபுத்தி யுமில்லார்
தேங்குவோர் வெறுஞ்சாவி. (௫)

வீடுதே வாலய பக்கங்க ளொன்றிரண்டு
வீணர்கள் பெரும்பாவி
பாடுபோல் வெட்கமில் லாமல் சுத்தஞ்செப்
மடையர்கள் வெறுஞ்சாவி. (௬)

அரசனன்று கேட்பான் தெய்வப்பின் கேட்குமென்
றஞ்சாதான் பெரும்பாவி.
நரகமுதல் தெய்வதண்டனை யுண்டென
நாடாதான் வெறுஞ்சாவி. (௭)

பொதுதர்மங்கள்.

(லாவணி)

ஒவ்வொரு இந்திய மைந்தரு மேபல
ஒழுக்கம், ஊக்கம், ஒற்றுமையும்,
செவ்வையா யடைந்து சிநேகமுங் கொண்டு
க்ஷேமமாய் வாழ்குவோம் நண்பர்களே. ௧.

இத்தலியா அமெரிக் காவிலும் பேதம்
இருப்பினும் எந்தன் நண்பர்களே
சத்காரி யங்களி லொற்றுமை யாகவே
சாதிப்பா ரெந்தன் நண்பர்களே. ௨.

சுந்தர மங்கைக் கிருகண் போலவே
தோற்றிடு மிந்து மகமதியர்
இந்தியா வுக்கிரு கண்க ளிதிற்குறை
எது வடைந்தாலுங் குற்றமன்றோ. ௩.

என்றுசர் ஸையத் அகமது கூறிய
இன்பமான மொழியின் படிக்கே
என்றும் சகோதரப் பான்மை விடாமல்
ஏகோபித் துவாழ்வோம் நண்பர்களே ௪.

தேங்காயி னோர்கண் கெடினுங் குறையே
சேரிந்து துருக்கர் கிரிஸ்தவராம்.
பாங்கான முக்கண்ணி லொன்று தீங்காயினும்
பாரதநாட்டிற்கே சேதமன்றோ. ௫.

கலிகலி யென்று கிலிகொள்வ தேனோ?
காரணமின்றி நண்பர்களே.
சலியாமல் மலைபோல் கார்யமு மற்றோர்
சாதிப்ப தில்லையோ? நண்பர்களே ௬.

கர்மம் பிராரத்வம் விதிவச மென்றுநாம்
கபத்தினில் வீழ்வதோ? நண்பர்களே.
மாய மறிந்திடில் முயற்சி தெய்வத்தினும்
வல்லதென் றறிவீர் நண்பர்களே. ௭.

பலதுள்ளி பெருவெள்ள மென்பதை மனதில்
பதிந்திடச் செய்வோம் நண்பர்களே
குலராமனுக் கணிலுதவி யதையுமவர்
கொண்டாடி னாரன்றோ? நண்பர்களே ௮.

ஒருபுல் வளர்ந்திடு மிடந்தனி லிருபுல்
உண்டு பண்ணுவோர் உத்தமரென்
றருமையாய் நௌரோஜி யருளிய திருமொழி
யனுசரிப் பீரென் நண்பர்களே. ௯.

ராமனாண் டாலென்ன! ராவணனாண் டென்ன!
நமக்கென்ன! வுமக்கென்ன! வென்றுரைத்து
நாமெல்லாம் பொதுநலம் பேணாத சட்டை
நாடிடக் கூடுமோ? நண்பர்களே. ௰.

அவயவங்க ளொன்று கூடிவயிற்றுக்
காகார மீயாக் கதைபோல
எவர்களும் பொதுநலப் பாடு படாவிடில்
எவர்க்குங் கேடன்றோ நண்பர்களே. ௰௧.

ஈயாத புல்லரிருந் தென்ன போயென்ன
எட்டிமரம் பூத்துக்காய்த்து மென்ன
ஓயாமல் தன்னலம் உன்னி யுழைப்போன்
உலகி லிருந்தென்ன நண்பர்களே. ௧௨.

கைத்தொழில்.

(கும்மி)

எங்கும் புகழ்ந்திடு மிந்தியநாட்டினில்
எற்றகருவி யெலாங் கிடைக்கும்
பொங்கமாய்க் கைத்தொழில் வர்த்தக முஞ்செய்து
புகழுடன் வாழ்வோம் நேயர்களே. ௧.

நீலக் கருங்கடல் மேலே மரக்கலம்
நிறுத்தி யணியணி யாகவேநாம்
கோலக் கொடிகட்டி ஞாலத்தில் வாணிபம்
கொந்தளிக்கச் செய்வோம் நேயர்களே ௨.

பஞ்சுமில், பட்டுமில், வைத்திடுவோம் நல
பற்பல மில்க ளமைத்திடுவோம்
பஞ்சமேலை கங்களும். மின்சயந் திரங்களும்
பாங்காய்ச்செய் தோங்குவோம் நேயர்களே. ௩.

வத்தி, தீக் குச்சிகள் வாழைநார்ப் பட்டுகள்,
மைக்கூடு, பென்சில், கண்ணாடியும்,
கத்திப்பிடி, ரப்பர், ஸோப்புகள், சீப்புகள்,
காகித முஞ், செய்வோம் நேயர்களே. ௪.

சீட்டோடு பூட்டுசிலேட்டு களுமிகத்
தேட்டமாய்ச் செய்குவோம் நேயர்களே
வாட்டமாய்ச் செப்புகள் டப்பிகள் தொப்பிகள்
வகைவகை யாய்ச்செய்வோம் நேயர்களே ௫.

அந்தநா ளிற்செய்த விந்தையாம் வேலைகள்
அற்புத மிப்பவுங் கண்டிடுவோம்
சுந்தரமாகிய டில்லியாக் ராவினில்
சொல்கிறேன் கேளுமென் நேயர்களே. ௬.

சலவைக்கல் லாற்செய்த மாளிகை, கோயிலின்,
சாதுர்யமென் சொல்லுவேன்! நேயர்களே
உலகத்தி லற்புத மானயிருப்புத்தூண் (குடேட்மீனர்)
உயர்ச்சியை யென்சொல்வேன்! நேயர்களே. ௭

புத்தர் புதிதாகச் செய்தது போற்காணும்
புதுமையை யென்சொல்வேன்! நேயர்களே
அதனை வேலைசெய் தாயிரத்தைந்நூறு
ஆண்டுக ளாயிற்றென் நேயர்களே. ௮

டாக்கா மஸ்லீன் டமாஸ்க்கர் கத்தியும்
சரியான காஸ்மீர் சால்வைகளும்,
மிக்கநயமான பத்தமடைப்பாயும்,
மேலான தன்றோ? நேயர்களே. ௯

எத்தனை யெத்தனையுத்தம வேலைகள்
யேற்றமாய்ச் செய்யலாம் நேயர்களே
மெத்தவே செய்துநா மித்தரை தன்னிலே
மேன்மை யடைகுவோம் நேயர்களே ௰.

தேசாபி மானமும் பாஷாபி மானமும்
சேர்ந்திட வேண்டும் நேயர்களே
தேசமெல்லாம் ஜெகதீசனருள் பெற்று
மேழி வாழ்வோம் நேயர்களே.

வித்யாகீதங்கள்.

நற்காலக்கல்வி.

(நல்லார்க்கும் என்றமெட்டு.)

பூதலத்திற் கோர்திலகம் போலிலகுந் தேசம்
புகழுமார்யா வர்த்தமென்ற புண்ய இந்தியாதேசம்
மாதவத்தி னுஞற்றித்தோம் வாழ்வதுமித் தேசம்
மாக்ஷிமைசே ரார்யரென்ற மகிமையும் ப்ரகாசம் ௧

அரியவாமிப் பெருமையாவும் அடைந்திருந்துங் கண்ணே!
அறிவு கல்விபொருள் தொழில்கள் ஆண்மை மேன்மை கண்ணே
வரவா மிசக்குறைந்து வருவதையென் கண்ணே!
மனதிற் சற்று முணர்ந்திடாமல் வாழ்வதென்னே? கண்ணே! ௨

அருங்கலைகள் சாஸ்திரங்கள் அனைத்துமேலாய்க் கண்ணே
அறிந்து மேன்மை பொருந்திடாமல் அவலமானோங் கண்ணே
ஒருங்குசேரு மாங்கிலர்கள் உயரறிவாற் கண்ணே
உயரறிவுங் கல்வியாலென் றுணருவா யென்கண்ணே. ௩

முற்காலக்கல்வி.

(கிளிக்கண்ணிமெட்டு)

கல்வியைக் கற்றிடுவோம் கவலை யகற்றிடுவோம்
செல்வமும் பெற்றிடுவோம்—நண்பரே—சிறப்புக ளுற்றிடுவோம்

தேசங்கள் சுற்றிடுவோம் சீர்மைகண் ணுற்றிடுவோம்
தோஷங்க ளற்றிடுவோம்—நண்பரே—தூய்வழி பற்றிடுவோம்

வித்தையைப் பூர்ணமாயும், மேலான நோக்கமாயும்,
மெத்த வுணர்ந்திடுவோம்—நண்பரே—மேன்மை யடைந்திடுவோம்

கேவலம் தன்னலமும், கியாதி, லாபம், பெருமை,
ஆவதொன் றேகருதி—நண்பரே—அற்பமாய்க் கற்பதாலென்?

பரீக்ஷை கொடுத்துமென்ன? பட்டங்கள் பெற்றுமென்ன?
தரித்திர வுத்தியோகம்—நண்பரே—தானே கிடைத்தாலுமென்?

தூயநம் பூர்வீகர்கள் சொற்பமாய்க் கற்றனரோ?
தியசுயநலத்தை—நண்பரே—சிறிதுங் கருதினரோ?

உலகோப காரமாக உத்தம சிந்தையுடன்
பலகால முமபயின்று—நண்பரே—பற்பல நூலமைத்தார்

வேதவே தாங்கங்களும், விளங்கு ஜடத்வ. சிறபம்,
பூத, பௌதிகங்களும்,—நண்பரே—புகழி ரசாயனமும்,
இலக்கிய, இலக்கணமும், இயற்றி வைத்தார்நமக்கு
அவக்கியஞ் செய்வ தென்னோ?— நண்பரே—அருமை தெரியாமலே

நாமெநம் சாத்திரத்தை நாடாமல் மூடமானோம்
சிமையெலா மிதையே—நண்பரே—தேர்ந்து சிறப்படைந்தார்

கைத்தொழிலுங் கைவிட்டு கலங்குதல் நாமேயன்றி
எத்திசையோருங்கற்று—நண்பரே—ஏற்ற மடைந்திலரோ?

வாணாளை வீணாளாக்கி வறுமையடைந்து நாமும்
பாணும் ஆகிடாமல்—நண்பரே—பயிலுவோம் பல்கலைகள்

செந்தமிழ்.

[அடிமடக்குக்கும்மி]

செந்தமி ழென்றசெந் தேனாறுபாய்ந்து
செழித்து வளர்ந்தவிந் நன்னாடு-செல்வம்
கொழித்து வளர்ந்தநம் பொன்னாடு-இப்போ
வெந்தழற் பாலைபோ லுந்தமிழின்றி
வெறுமை யுறுவதோ இன்னாடு-மிக்க
வறுமை யுறுவதோ இந்நாடு.

சங்கந் திகழ்ந்து தமிழ்முனிவாழ்ந்து
தழைத்து வளர்ந்த இந்நன்னாடு-சீராய்ப்
பிழைத்து வளர்ந்தநம் பொன்னாடு-இப்போ
கங்கு லடர்ந்து நாடெங்கும் வெங்கானம்போல்
காக்ஷியிழப்பதோ யின்னாடு-உயர்
மாக்ஷியிழப்பதோ? இன்னாடு.

இறையனார் நக்கீரர் ஏற்றதொல் காப்பிய
ரிருந்துவளர்ந்த இந்நன்னாடு-பன்னூல்
பொருந்தி வளர்ந்தநம் பொன்னாடு-இப்போ
அறை தறை ஆங்கிலத் திறமையி னற்றமிழ்
அலக்ஷிய மாவதோ? இன்னாடு- மிகப்
பலக்ஷய மாவதோ? இன்னாடு

ஔவை யுடன்றிரு வள்ளுவனாயனார்,
அருமையாய் வாழ்ந்தயிந் நன்னாடு-மிகப்
பெருமையாய் வாழ்ந்தநம் பொன்னாடு-இப்போ
செவ்வையாய்ப் பேசவும் தெரியாம
லேமிகத் தியங்கிட லாமோ? இன்னாடு-மெத்த
மயங்கிட லாமோ இந்நாடு.

கம்பர். புகழேந்தி, காளமேகம், வில்லி
கவிமழை பெய்த இந்நன்னாடு-இந்தப்
புவிமகிழெய்திய பொன்னாடு-இப்போ.
அம்பலந் தோறும்வாய்த் தம்பலம்
போற்றமிழ்அறுவருக்க லாமோ? இந்நாடு
மிகக்-குறுகுறுக்க லாமோ? இந்நாடு

தென்மொழி யேவேத நன்மொழியாகச்
சிறந்து விளங்கிய இந்நாடு-எங்கும்
பரந்து துலங்கிய பொன்னாடு-இப்போ
புன்மொழி போலவே துன்மதியாகப்
புறக்கணிக் கலாமோ இந்நாடு-இப்போ
தறக்கணிக்கலாமோ? இந்நாடு.

"வடமொழிஎன்பதும்" "தென்மொழி"
என்பதும் மக்கட்கிரண்டுநயனமன்றோ - அன்றி
"தக்க விரண்டு கரங்களன்றோ?"
திடமிகு நம்சுய பாஷையைக் கைவிட்டுத்
திண்டாட லாகுமோ? இந்நாடு-மற்றதைக்
கொண்டாட லாகுமோ? இந்நாடு.

அன்னை பசித்தழ அந்தணர்க்காயிரம்
அன்ன தானங்களைச்செய்வதுபோல்-மிகச்
சொன்ன தானங்களைப் பெய்வதுபோல்
நன்னய மாய்த்தினம் பன்னிடும் பாஷையை
நாடாமல்போவதே னிந்நாடு-நமும்
தேடாமல் போவதே னிந்நாடு.

மூலாதாரக்கல்வி.

[சேமமுற்ற என்ற மெட்டு.]

நமதுநாட்டில்மூலா தாரக்கல்வி தன்னை
நாடுவோம் ஒன்று கூடுவோம்-கல்வி தேடுவோம்-இப்போ
நமக்கு நாமேகல்வி யடைக்கு முறைகளைக்கை
யாடுவோம் நாங்கைபாடுவோம்.

படித்தோர் நம்மில் நூறுக் கொருவ ரென்பதைப்
பாருமே மற்ற-யாருமே-உள்ள சீருமே—இப்போ
பார்க்கப் பார்க்கஇதில் யார்க்குமே ஆச்சர்யம்
நேருமே யார்க்கும் நேருமே.

எட்டு பேரிலேழு பேருக்கோ ரக்ஷரம்
போடவே பேனா-நாடவே கொஞ்சங் கூடவே-சற்று
மியலா தெனில்மற்ற அபலர் சிறியாரோ
வாடவேமுகம் வாடவே.

ஐந்து வூரில்நாலு வூரிற்பாடசாலை
இல்லையே-இது எல்லையே- இல்லாத தொல்லையே—இதை
அறிந்து செய்யப்பணம் செறிந்த வர்க்குமனம்
வல்லையே-மனம் வல்லையே.

ஐரோப்போ அமெரிக்கா ஆஸ்த்ரேலியா கானடா
தேசமும்-கல்வி நேசமும்-பிர காசமும்—போல
அந்த மிகுந்தநம் இந்தியா விலுண்டோ
லேசமும்-ஒரு லேசமும்.

கல்வி விஷயத்தில் பின் தங்கி பருவி
யாவிலும்-பிலிப்பைனின் தீவிலும்-மற்றஜா வாவிலும்—தாழ்ந்து
கற்போர் நூற்றுக் கொன்றாய கற்போர் தாமதிந்தி
யாவிலும்-இந்தி யாவிலும்.

அறியாமை.

—o:o—

["காயமே யிதுபொய்யடா என்ற மெட்டு.]

நாட்டிற் படிப்போ யில்லையே அதினாலே பற்பல தொல்லையே
கூட்டிலகற்கு எல்லையே-யிலைக் கூறுவேன் சிலசொல்லையே.
கல்விமேவக மொழுக்கமும்- உயர் நாகரீகப் பழக்கமும்
செல்வச்சிறப்பின் முழக்கமும்-இன்றிச் செறிந்ததே தீவழக்கமும்.
உண்மை, சத்யம், நன்றியே-யன்றி ஊக்கம், ஒற்றுமையின்றியே
தன்மை, தயை, பொறை, குன்றியே-எங்குஞ் சார்ந்ததே இனந்துன்
பொறுமை, சகிப்பில்லாமலே-மனம் பொதுநலம், புல்லாமலே(றிமே
கருமமுறை, செல்லாமலே-மிகத் தாழ்ந்ததுங் கல்லாமலே.
நன்னெறி, மேல் நோக்கமும்-நாம் நாடுந்தொழிலி னூக்கமும்
இல்லாமல் பொருளாக்கமும்-போய் எய்தினோமன வக்கமும்.
ஜாதி, மத, வித்தியாசமும்-அதில் தாழ்வு மேல்என்றுந்துவேஷமும்
ஐதியத்திலே பாசமும்-மிகுந் தொதுக்குவோம் பந்து நேசமும்
அவநம்பிக்கை, வீண்பயம்-துர் ஆசார, மொடு அன்னயம்
எவையுங் கல்வி நயம்-இல்லாமல் ஏற்பதன்றோ? சமுதாயம்
பொய், பொறாமை, சூது, வாது, போதை, களவு, புவிமீது
எய்திநீதி யிலாது தீதாய் எங்கலாச்சே நீங்காது
பொது நலத்துக் கோது-மேலோர் புத்தி மனதி லாகாது
எதுவுமிபற்ற லேலாது, மனம் ஏங்குகின்றோ மிப்போது.
தேச க்ஷேமம் யாவுங்-கல்வி சிறப்பினாலே யேமேவும்
பாசங்கள் ஏவும் புத்தி மதியும் அதனாலேமாவும்
நாட்டுப்புறங்கள் பாருமே-அதில் நாளுங் கலகம் நேருமே
கோர்ட்டு வழக்குஞ் செருமே-அதால் கோடிக் குடும்பஞ் சோருமே
பெருந் தன்மையற்றய லண்டைகளில் பேசிக்கிழிக்கிறார் தொண்டை
ஒருவா கொருவர் சண்டை-செய்து உடைத்துக்கொள்கிறார் மண்டை
வாதக் கடிதப்படிக்கவே-சிறு மனுவெழுதிப் படிக்கவே
சொத்தக் கணக்கு முடிக்கவே-யின்றி சோர்கிறார் மனந் துடிக்கவே

[உடுமேலே முத்துசாமி பாட்டை என்ற மெட்டு]

இந்தவித மாயிருந்தால் க்ஷேமம்-இது எந்தவித மாருப் பிரகாசம்
இத்தையாலோ—சித்திடாமல்
மெத்தனம் வ—கித்திடுவ தேனோ மதி தானோ.

இந்தியத்தாய் மைந்தனன்றோ யாரும்—இதை சிந்தியாதிருக்கலாமோ நன்
இக்கணமே—ஏகதுமாயும் [றோ. நேரும்
ஒக்கவே பா—டிக்கவழி யேயும் படி யேயும்

எத்தனை தானங்களிருந் தாலும்—உயர் வித்தையைப் போல் வருமா
எத்திசையு—மெத்தப்புகழ் (மோ தாருக்காலும்
முத்தமிழ்—விதைத்திடுவீர் எங்கும் பொருள் பொங்கும்

கைத்தனத்தை போலிது கெடாது—வேறெத்திறத்தாலும்பிரிந்தி
கள்ளர்பகை—யுள்ளவர்கள் (—ராது.
கொள்ளையிடு—சள்ளையடை-யாது குறையாது

நித்தமபி விருத்தி யாகும்சுத்த—மெத்தனமடைந்தவனும் போகும்
முற்றறிவு—பெற்றுமிக
உற்றுணர்வு—முற்றுசுக மோங்கும்-கலி-நீங்கும்.

அன்னதானஞ் செய்திடினு மென்ன—அதுஉண்ணத ஞானந்தருமோ
அந்தப—யந்தவிப (பன்னா
பின்திரிபு—முந்தருமோ அறியும்-சொல்லிய-விரியும்.

கல்விபற்றி யுள்ளவர்கள் பாரும்—அதைச் சொல்லிடில் நாருக்காறு
கல்நிலைகை—கொண்டுமிசைபவர் (பேர் தேரும
அல்லையுள—பெருமிடர்பரி-நாசம இது மோசம

தேசத்தின் க்ஷேமங்களுக்காதாரம்-காய் நேசத்துடன் வாழ்ந்திடு
சிந்தையுடன்—செந்தமிழை (மாசாரம்
எந்தவிட—முந்தனைக்கச் செய்யும்-ஜன முய்யும்.

சொத்ததிக மாயிருந்தென் லாபம்—அது வித்தைக்குத வாவிடல்
திடமோடுயிர்—விட்டிடாமல் (பாழ்ங் கூபம
செட்டுகல்வி—மட்டிலின்றி-தோன்றும்-கர்ணன்-போன்றும்

தேசத்தில் வலை விரித்தாற்போல-மிகக தேசத்தோடளிப்போம
சித்திரம்பல்—நைத்தொழிலும் (கல்விச்சாலை
வர்த்தகங்கரு—ஷித்தொழிலுஞ்-சேரும்-துயர்-தீரும்.

கோவில் மடங்களெல்லா மேன்மைப்பட—அதில் மேவிடும் பொருள்களை
மேலகக்கலா—சாலைக்கிடம் (யோக
சாலைக்காடுக—தாமிலநல்ல—கூடும்—இவை—நாடும்.

பாமரஜனங்கட் கறிவூட்டும்—அவர் க்ஷேமங்களின்மேல் கவனம் நாட்டும்
பள்ளூ, பறை—கள் விமோசனக்
கொள்ளூ முறை—கள் விர்த்திகள்—பாரும்—கல்தாரும்.

(அகப்பேய்ச்சித்தர் பாட்டு மெட்டு.)

நூதன மாமுறைகள்—நண்பரே—நுண்ணறிவா லுணர்ந்து
சாதனை செய்திடுவோம்—நண்பரே—சம்பூரண மாகும்வரை

தேக சிரமம்பொருள்—நண்பரே—செலவையும் பாராமல்
ஆம்வரை யும்முயற்சி—நண்பரே—அனைவரும் செய்திடுவோம்

நம்மின் படிப்பையெல்லாம்—நண்பரே—நாமே நடத்திவரின்
செம்மையா யிந்தியாவும்—நண்பரே செழித்துவளர்ந் தோங்கும்

அமெரிக்கா விற்றனிகர்—நண்பரே—அமைத்தான் மாதிரியால்
சமத்துவ மின்றியப்போ—நண்பரே—தக்கநற் கீர்த்திபெற்றார்

பிறரை யெதிர்பார்க்கல்—நண்பரே—பிரயோஜனமேயில்லை
பறவையாம வானம்பாடி—நண்பரே—பகாமதவைத் யறந்ததோ?

தேச பாஷைகளை நாம—நண்பரே—தேருமே தடை றல்லாமோ?
பேசவுங் கூடலாமோ?—நண்பரே—பிறரையு மேசலாமோ?

பிறந்தநாள் முதலாக—நண்பரே—பேசும்தாய்ப்பாஷை தனை
யெடுத்திடவுங் கூடுமோ—நண்பரே—பகைமை குறையலாமோ

படிப்பின் பயன்.

"பொன்னார் மேனியனே" என்ற மெட்டு.

பொன்னு லிவ்வுலகில் புகழோங்கி விளங்கிட நாம
பண்ணு லும்பயின்று பயன் றேர்ந்து தெளிவோமே
முன்னோ ரெத்தனையோ முது நூல்க ளியற்றியுள்ளார்
அன்னோ ரென்பெருமை யடைந் தாருள ரோபுகலீர்.

கல்வியின் மாட்சிமையைச் சொலக் காணுமோ வென்றெருநா
நல்லவே கமொழுக்கம நாகரீ கமுகருவை
செல்வமுஞ் சீருமுண்டாந் தனைச் சேர்ந்தார்க் கற்பிப்புண்டா
சொல்வன்மை வாய்மையுண்டாம் மிகச்சுகமு கற்கீர்த்தியுண்டாம்

அன்பும் அருளுமுண்டாம் அவையடக்கம் பொறையுமுண்டாம்
இன்ப மெழிலு முண்டாம் நல் இனியமொழியுமுண்டாம்
தென்பு தெளிவுமுண்டாம் மிகத் தேசாபிமானமுமுண்டாம்
பின்பு நம்பெற்றோர்க்குப் பெருமை பேரும் புகழுமுண்டாம்

அறம் பொருள் இன்பம் வீடு எனு நாம் புருடார்த்தம் நான்கும்
திறமுறச் சேர்த்து வைக்கும் உயர் தெய்வருள் கூட்டிவைக்கும்
மறத்தை யழித்து நம்மின் கொடுவல்வினையைத் தொலைக்கும்
பிறப்பை யொழித்து விடும் அந்தப் பேரானந்தங்கொடுக்கும்

கைத்தனம் போலழியா பொல்லாக் கள்ளரய கரியார்
சத்துருக்கள் பறியார் நம் தாயாதியுங் கவையார்
எத்தனை கோடிசரம் பிறர்க் கீந்தாலுமே குறையா
நித்தம் விருத்தி யாகிநீண்டு வளர்ந்தோங்கும்

கற்றோர் தன்மகிமை உயர் காவலர் கட்கு முண்டோ?
பொற்றேரூர்ந்து செலும் அந்தப் பூபதியும் பணிவார்
சற்றேயங்களுள்ளோர் நாடி நல்வர வேற்றிடுவார்
உற்றோ ராகிடுவார் உபகாரங்கள் செய்திடுவார்

சென்ற விடங்களெல்லாம் சிறப்பே பெறுவார்களன்றோ
தென்றேயத்திலன்றோ மன்னர்தன் மதிப்புப் பெறுவர்
மன்றோர் போற்ற நிற்பர் மணியாசனம் வீற்றிருப்பர்
குன்றேறும் விளக்காய் இக் குவலயத்தே வாழ்வார்.

முற்றிற்று.

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௩	௯	ர	ற
௪	௪	மு	ம
,,	௰௫	ர	ற
௭	௰௧	வழி	ர்நமை
,,	,,	நாம்	இப்போ
,,	௨௰	அடை—துவோம்	தடை—ந்தனர்
௰௨	௨௰	ச	சு
௰௬	௰௭	ள்ளி	ளி
௨௨	௰௭	போ	பா
,,	௰௯	து	த
௨௩	௨௧	ங்ள்	ங்கள்
,,	௨௪	ர்கொ	ர்க்கொ
,,	௨௬	ச்செ	சொ
௨௪	௨௪	ஊா	ழை
௨௫	௪	ரி	றி
,,	௰௯	ள்	ளே
,,	௨௰	ர	ற
௨௬	௯	த்ள	த்தன
,,	௰௨	ம்வி	மபிவி
,,	௰௮	தெ	த
,,	,,	ரு	று